# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 110–ன்கீழ்
# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின்
# அறிக்கை – 17.4.2013

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பால் உற்பத்தியாளர்கள் உற்பத்தி செய்யும் பாலுக்கு உடனுக்குடன் ஆதாயமான விலை கிடைக்கச் செய்தல் மற்றும் நுகர்வோருக்கு தரமான பாலினை நியாயமான விலையில் விற்பனை செய்தல் ஆகியவற்றை குறிக்கோளாகக் கொண்டு செயல்படும் எனது தலைமையிலான அரசு, தமிழ்நாட்டில் கால்நடைகளின் எண்ணிக்கையை உயர்த்துவதன் மூலமும், பால் பண்ணைகளின் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதன் மூலமும், பால் கொள்முதலில் தமிழ்நாடு முதல் இடத்தை அடைவதற்கான ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது என்பதை மாமன்ற உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள்.

எனது அரசின் முனைப்பான நடவடிக்கைகள் காரணமாக, முந்தைய மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் நாளொன்றுக்கு சுமார் 20 லட்சம் லிட்டர் என்று இருந்த பால் கொள்முதல் தற்போது 24.36 லட்சம் லிட்டராக உயர்ந்துள்ளது. தமிழக வரலாற்றில் முதன் முறையாக 20.11.2012 அன்று 27.15 லட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்து ஆவின் நிறுவனம் சாதனை படைத்திருக்கிறது. மேலும், புதுப் புது பால் உப பொருட்கள் அறிமுகப்படுத்தப்பட்டு, பால் பொருட்கள் உற்பத்தியும், விற்பனையும் கணிசமான அளவு தொடர்ந்து உயர்ந்து கொண்டே வருகிறது. இதன் காரணமாக, 2011–2012–ல் 2,791 கோடி ரூபாயாக இருந்த விற்பனை 2012–2013 ஆம் ஆண்டில் 3,584 கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது என்பதை இந்த மாமன்றத்திற்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தற்போது தமிழ்நாட்டில் பால் கொள்முதல் அதிகரித்துள்ள நிலையில், மாவட்ட ஒன்றியப் பால் பண்ணைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை அதிகரிக்கும் வகையிலும், பால் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் உறுப்பினர்களை ஊக்குவிக்கும் வகையிலும், 95 கோடியே 66 லட்சம் ரூபாய் மதிப்பில் கீழ்க்காணும் பணிகள் நடப்பாண்டில் மேற்கொள்ளப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1. திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, வேலூர், விழுப்புரம், சேலம், தருமபுரி, திண்டுக்கல் மற்றும் காஞ்சிபுரம் – திருவள்ளூர் பால் கூட்டுறவு ஒன்றியங்களின் பால் பண்ணைகளில் உள்ள குளிர்விப்புத் திறன் வசதி; குளிரூட்டப்பட்ட பாலைச் சேமிக்கும் கொள் கலன்கள் வசதி; பாலை திடப்படுத்தும் வசதி, பாலிலிருந்து நுண் கிருமியை நீக்குவதற்கான வசதி; பாலிலிருந்து வெண்ணெயை பிரித்தெடுத்து சமன்படுத்தும் வசதி; பால் விற்பனை செய்ய ஏதுவாக குளிர்பதனக் கிடங்கின் கொள்ளளவை அதிகரித்தல் மற்றும் மின் இயக்குதிறன் ஆகியவை 20 கோடியே 90 லட்சம் ரூபாய் செலவில் மேம்படுத்தப்படும்.

2. சென்னை மாநகரில் நாளொன்றுக்கு 10.20 லட்சம் லிட்டராக இருந்த விற்பனை 11.25 லட்சம் லிட்டராக அதிகரித்துள்ள நிலையில், பெருகி வரும் பாலின் தேவையைக் கருத்தில் கொண்டு, 37 கோடியே 90 லட்சம் ரூபாய் செலவில் பால் கையாளும் திறன் கீழ்க்கண்டவாறு மேம்படுத்தப்படும்.

- ❖ அம்பத்தூர் பால் பண்ணையில் சக்தி சேமிப்பு உயர்நிலை அழுத்தக் கருவிகள், பால் திடப்படுத்தும் கருவிகள், வெப்பம் ஊடுருவாத சுவர் மற்றும் தானியங்கி இயந்திரங்கள் 14 கோடியே 25 லட்சம் ரூபாய் செலவில் வாங்கப்படும்.

- ❖ சோழிங்கநல்லூர் பால் பண்ணையில், மணிக்கு 6,500 லிட்டர் உற்பத்தித் திறன் கொண்ட உச்ச வெப்ப நிலையில் பதப்படுத்தப்பட்ட பாலை நுண்ணுயிர் நுழையா பைகளில் அடைக்கும் இயந்திரம் 10 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும்.

- ❖ மாதவரம் பால் பண்ணையில், சக்தி சேமிப்புக் கருவியுடன் கூடிய உறைநிலை நீர்த் தொட்டிக் கருவிகள், புதிய குளிர்விக்கும் கருவிகள் மற்றும் பசுமை பால்பண்ணை சார்ந்த திட்டங்கள் 5 கோடியே 60 லட்சம் ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும்.

- ❖ சென்னை மாநகர பால் பண்ணைகளில் உணவு பதப்படுத்துதல் திட்டத்தின் கீழ் குளிரூட்டம் செய்வதற்கான வசதிகள் 8 கோடியே 5 லட்சம் ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும்.

3. பால் உற்பத்தியாளர்களுக்கு பாலின் தரத்திற்கேற்ற விலை கிடைக்கும் வகையில், பாலின் தரம் அறிய உதவும் 6,500 பகுப்பாய்வுக் கருவிகள் 35 கோடியே 70 லட்சம் ரூபாய் செலவில் படிப்படியாக வாங்கப்பட்டு, தொடக்க பால் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்படும்.

4. தரமான பாலினை தொடர்ந்து வழங்கி வரும் உறுப்பினர்கள் மற்றும் சங்கங்கள் கண்டறியப்பட்டு, ''நட்சத்திர அந்தஸ்து'' மற்றும் ஊக்கத் தொகை வழங்கப்படும். இதன்படி, சங்கங்களுக்கு தரமான பால் வழங்கும் உறுப்பினர்கள் ஒவ்வொரு ஒன்றியத்திலும் தலா 300 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டு, முதல் நூறு பேருக்கு முதல் பரிசாக 3,000 ரூபாய், இரண்டாவது நூறு பேருக்கு இரண்டாம் பரிசாக 2,000 ரூபாய், மூன்றாவது நூறு பேருக்கு மூன்றாம் பரிசாக 1,000 ரூபாய் என ஊக்கத் தொகை வழங்கப்படும். இதற்கென ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் 6 லட்சம் ரூபாய் என 1 கோடியே 2 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

5. இதே போன்று ஒன்றியங்களுக்கு தரமான பால் வழங்கும் முதல் 10 சங்கங்கள் கண்டறியப்பட்டு, முதல் பரிசாக 25,000 ரூபாயும், இரண்டாம் பரிசாக 15,000 ரூபாயும், மூன்றாம் பரிசாக 10,000 ரூபாயும், மற்ற ஏழு சங்கங்களுக்கு 5,000 ரூபாயும் வழங்கப்படும். இதற்கென ஒரு ஒன்றியத்திற்கு 85,000 ரூபாய் என மொத்தம் 14 லட்சத்து 45 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும்.

மேற்காணும் எனது தலைமையிலான அரசின் முனைப்பான நடவடிக்கைகள் மூலம், தமிழகத்தில் இரண்டாவது வெண்மை புரட்சி விரைவில் நிறைவேறும் எனத் தெரிவித்துக் கொள்கிறேன்.

* * * * * * *